செ.வெ.எண்:39 நாள்: 15.07.2021

# விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் கிளியனூரில் அமைந்துள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் கிளியனூரில் அமைந்துள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.07.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது எனவும், நெல் கொள்முதல் செய்வதில் எடையளவு சரியாக உள்ளதா எனவும், நெல் கொள்முதல் ரகங்கள் எவ்வாறு தரம் பிரிக்கப்படுகிறது எனவும், மேலும் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு பணப்பட்டுவாடா எவ்வாறு செய்யப்படுகிறது என நெல் கொள்முதல் நிலைய அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு தேவையான இடவசதி, மின்சார வசதி மற்றும் நெல் மூட்டைகளை மழையில் நனைந்து விடாதவாறு பாதுகாக்க தார்பாய் வசதி உள்ளதா என்பதையும், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை உடனடியாக ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும், இருப்பு வைக்கப்பட்ட நெல் மூட்டைகளை உடனடியாக இயக்கம் செய்யவும், நெல்லில் கற்கள், பதர்கள் இல்லாமல் நெல்மணிகளை தூற்றுமாறும், முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் டோக்கன் முறையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நெல் கொள்முதல் நிலைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது வருவாய் வட்டாட்சியர் திரு.சங்கரலிங்கம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.முருகன், திரு.ராமதாஸ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

…………………………………………………………………………………..

வெளியீடு :செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் - விழுப்புரம்

செ.வெ.எண்: 40 நாள்: 15.07.2021

**விழுப்புரம் மாவட்டம் வானூர் ஊராட்சி ஒன்றியம் கொழுவாரி ஊராட்சியில் அமைந்துள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

விழுப்புரம் மாவட்டம் வானூர் ஊராட்சி ஒன்றியம் கொழுவாரி ஊராட்சியில் அமைந்துள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.07.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இச்சமத்துவபுரத்தில் ரூ.1.92 இலட்சம் மதிப்பீட்டில் 250 சதுர அடி கொண்ட 100 வீடுகள் கட்டப்பட்டு வருவதையும் தெருவிளக்குகள், தார்/சிமெண்ட் சாலைகள் அமைக்கப்படுவதையும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள், நியாயவிலை கடை, நுழைவாயில் பலகை, குடிநீர், பைப்லைன் மற்றும் பொழுதுபோக்கு அறை, சுகாதார நிலையம் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பூ.காஞ்சனா, ஊரகவளர்ச்சித்துறை செயற்பொறியாளர் திரு.ராஜா, உதவி செயற்பொறியாளர் திரு.புவனேஸ்வரி, வருவாய் வட்டாட்சியர் திரு.சங்கரலிங்கம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.முருகன், திரு.ராமதாஸ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.